www.tamilarangam.net

ஈழச்செய்தி
EELAM NEWS
★EPIC
(ESTD IN 1980) POST BAG 5551, MADRAS-94. INDIA.

கடிதம் 35 ஜூன்-ஜூலை—'86

**தன் முயற்சியில் சற்றும் மனம் தளராத விக்கிரமாதித்தன் மீண்டும் முருங்கை மரத்தின் மீதேறி அங்கே தொங்கும் உடலைக் கீழே வீழ்த்தினான் அதனுள்ளிருந்த வேதாளம் எள்ளி நகைத்து............**

# வேதாளம் கதை பழங்கதை
# விடியலை நோக்கி விரைந்து செல்வோம்

மீண்டும் மீண்டும் விக்கிரமாதித்தன் முருங்கை மரத்திலிருந்து வேதாளத்தைக் கட்டியிழுத்து வருகிறான். ஆனால் வேதாளமோ விக்கிரமாதித்தனுக்கு ஏதாவது கதைகளைச் சொல்லி முடிவில் புதிர் போடடு நேரத்தைக் கடத்தி விட்டு — விக்கிரமாதித்தனிடமிருந்து விடையும் கேட்டு விட்டு — மீண்டும் முருங்கை மரத்தில் போய் ஏறிக் கொள்கிறது. ஈழமக்களின் போராட்ட வரலாறு என்பது அம்புலிமாமாக் கதையல்ல என்பதைப் புரிந்து கொள்வது அவசியமாகும்.

சிறீலங்கா அரசுடன் பேச்சுவார்த்தை என்பது ஈழமக்களுக்கு புதிய விடயமல்ல. எல்லா வடிவத்திலும் அந்த நாடகத்தைப் பார்த்துப் பார்த்து அவர்களுக்குப் புளிதுப் போய் விட்டது. ஆரம்பம, இடைக்கட்டங்களில் மாறுபட்ட காட்சி ஜோடனைகள் அமைக்கப்பட்டாலும் முடிவு அனைத்திலும் ஒன்றாகவே இருக்கிறது — விடையைக் கேட்டுக் கொண்ட வேதாளம் மீண்டும் முருங்கை மரத்தில் ஏறிக் கொள்வதைப் போல — காரணம், பேச்சுவார்த்தை நாடக இயக்குநரும் கதை வசனகர்த்தாவும் இசையமைப்பாளரும் மற்றும் அனைத்துமாகிய ஜே. ஆர். ஜெயவர்த்தனா ஒரே நோக்கத்துடனும் ஒரே ரசிகர் கூட்டத்துக்காகவுமே அந்த நாடகங்களை மேடையேற்றுகிறார். எனவே ஜே. ஆரின் நாடகத்தில் புதிய உள்ளடக்கங்களை புதிய முடிவுகளை எதிர்பார்பபவர்கள் அவரின் கடந்த கால நாடகங்களை மறந்து போனவர்களாக மட்டுமே இருக்கமுடியும். இருட்டறைக்குள்ளே இல்லாத பூனையைத் தேடுலதுனால் பலன்............○

ஈழமக்களின் போராட்டத்தை அடக்கவோ, பேச்சுவார்த்தைச் சித்து விளையாட்டுக்கள் மூலம் ஈழமக்களை ஏமாற்றவோ சிறீலங்கா அரசினால் முடியாது. ஈழவிடுதலைப் போராட்டத்தை சிறீலங்கா அரசு எந்த சக்திகளின் துணை கொண்டும் அடக்கமுடியாது என்பது நிருபிக்கப்பட்டுவிட்ட விடயமாகும்.

இனி ஈழத்தில் சுதந்திர சூரியன் உதிப்பது எப்போது? என்பது மட்டும்தான் கேள்வி.

**ஈழ விடுதலைக்கான ஆயுதப் போராட்டத்தின் பலத்தை வடிவ ரீதியிலும் உள்ளடக்க ரீதியிலும் அதிகரித்தல்,**

**ஈழவிடுதலைப் போராட்ட அமைப்புகளிற்கிடையிலான ஒற்றுமை, சர்வதேச நட்பு சக்திகள் ஈழ விடுதலைக்கு ஆதரவாக தமது கைகளை உயர்த்துதல்...**

என்பவையே அந்த சூரியோதய விடியலுக்கான கால நேரத்தைத் தீர்மானிப்பவையாகும்.

மேற்குறிப்பிட்ட மூன்று நிர்ணயக் காரணிகளையும் குறித்து ஈழப்போராளிகள் அனைவரும் தமது சிந்தன்னையும் செயல்களையும் ஒன்றிணைக்க வேண்டும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**சிறீலங்கா இனவெறி அரசின் ஆயுதப்படையினரால்**
**சூன் 01 முதல் சூலை 21 வரை**
**படுகொலை செய்யப்பட்ட தமிழ் மக்கள் தொகை 676,;**
**கைதானோர் 7,000த்துக்கும் அதிகமாகும்.........**

*ஜூன்—1*

திருகோணமலை மாவட்டம் தம்பலகாமம் பகுதியில் பி. பி. சி. வானொலிச் செய்தி கேட்டுக் கொண்டிருந்த ஒரு தமிழ்க் குடும்பத்தினர் கறுப்புச் சட்டை ராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்டனர். 13 வயதுச் சிறுமி ஒருத்தி படுகாயம் அடைந்தார்.

— மட்டக்களப்பிலிருந்து வெயாங்கொடை சென்று கொண்டிருந்த உதயதேவிரயிலில் குண்டு ஒன்று வெடித்ததில் 18 அப்பாவி மக்கள் இறந்தனர். 55 பேர் படுகாயமடைந்தனர்.

— யாழ்ப்பாணம் கோட்டை ராணுவ முகாமிலிருந்து ராணுவத்தினர் மோட்டார் செல்தாக்குதலை மேற்கொண்டதில் இரண்டு சிறுவர்கள் உட்பட 3 பேர் பலியானார்கள். 39 பேர் படுகாயமடைந்தனர். துரைராஜா (வயது 12), சின்னக்குமார் (வயது 13) ஆகிய இருவரும் ஸ்தலத்திலேயே பலியானார்கள்.

— வெயாங் கொடையில் ரயில் குண்டு வெடிப்புக் குப்பின் ரயிலில் இருந்த 5 தமிழர்கள் உயிருடன் எரிக்கப்பட்டனர்.

*ஜூன்—2*

மன்னார் பேசாலைக் கடலில் மீன் பிடித்து விட்டுக் கரையை நோக்கி வந்த மீனவர்களை வழிமறித்துத் துப்பாக்கிப் பிரயோகம் செய்த ராணுவத்தினர், அவர்கள் கொண்டு வந்த பல்லாயிர ரூபா மதிப்புள்ள இறால்களைப் பறித்துச் சென்றனர்.

— கிளிநொச்சியில் வீடு வீடாகப் புகுந்த ராணுவத்தினர் ஆயிரத்துக்கு மேற்பட்ட ஆண்களைக் கைது செய்து ராணுவ முகாமுக்குக் கொண்டு சென்றனர்.

போராளிகளின் நடவடிக்கைகளையும், அவர்கள் பற்றிய விபரங்களையும் உடனுக்குடன் தெரிவிக்க வேண்டும் என்றும் இல்லாவிடில் அவர்கள் எல்லோரையும் சுட்டுக்கொன்று விடப்போவதாக எச்சரிக்கை செய்தபின் விடுதலை செய்தனர்.

— யாழ் கோட்டை ராணுவ முகாமிலிருந்து ராணுவத்தினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். முத்தையா இராமலிங்கம் (வயது 56), சுப்பையா செல்வி (வயது 16) ஆகிய இருவரும் பலத்த காயமடைந்தனர்.

— மாங்குளத்திலிருந்து 18 கவச வண்டிகளிலும், டிராக்டர்களிலும் வந்து கொண்டிருந்த ராணுவத்தினர், வழியெங்கும் துப்பாக்கிப் பிரயோகம் செய்து வந்ததில் பொதுமக்கள் பலர் காயமடைந்தனர்.

*ஜூன்—3*

— மட்டக்களப்பிலிருந்து கொழும்பு சென்று கொண்டிருந்த ரயிலில் கெக்கராவை என்னுமிடத்தில் இனவெறியூட்டப்பட்ட சிங்களக் குண்டர்கள் கத்தி, கோடாரி, போத்தல்களுடன் உள்ளே ஏறி பயணம் செய்து கொண்டிருந்த தமிழர்களைத் தாக்கினர். 5 பேர் இறந்தனர். 10 பேர் கால், கை வெட்டப்பட்ட நிலையில் கிடந்தனர்.

— நாவற்குழி ராணுவ முகாமிலிருந்து இராணுவத்தினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் யோசப் ராஜா ஹரி என்பவர் படுகாயமடைந்தார். அரியாலையைச் சேர்ந்த வீடு ஒன்று முற்றாகச் சேதமானது.

— மட்டக்களப்பு இருதய புரத்தில் தேடுதல் வேட்டை நடத்திய இராணுவத்தினர், பொதுமக்கள் 3 பேரை சுட்டுக் கொன்றனர். 25 பேரைக் கைது செய்து கொண்டு போயினர்.

— திருகோணமலை மாவட்டம் பாலம்பட்டாறு, முத்துநகர் ஆகிய முஸ்லீம் கிராமங்களில் ஊர்காவல் படையினர் புகுந்து ஒரு லட்சம் பெறுமதியான நகைகளைக் கொள்ளையடித்தனர். முஸ்லிம் பெண் ஒருவரைக் கற்பழித்துச் சித்திரவதை செய்தனர்.

— திருகோணமலை 3ம் கட்டையிலுள்ள உப்பு வெளியில் ஒரு வீட்டிலிருந்து, ஊர்காவல் படைக் குண்டர்களால் கொலை செய்யப்பட்ட 10 சடலங்கள் மீட்கப்பட்டன.

*ஜூன்—4*

— கிளிநொச்சி ராணுவ முகாமிலிருந்து அதிகாலை இராணுவத்தினர் நடத்திய செல் தாக்குதலினால் கிளிநொச்சி பஸ் டிப்போவுக்கு அருகிலுள்ள ஒரு வீடு முற்றாகச் சேதமடைந்தது. வீட்டினுள் இருந்த 4 சிறுவர்கள் பலியாயினர்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஜூன்—5

— கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு உணவு முத்திரைகள் ஏற்றி வந்த லொறி ஒன்றின் மீது நடத்தப்பட்ட ஹெலிகொப்டர் குண்டு வீச்சுத் தாக்குதலினால் லொறி சாரதி செல்லையா தர்ம ராஜா (வயது 28) என்பவரும், யாழ் உதவி அர சாங்க அதிபரின் சாரதி ஒருவரும் கொல்லப் பட்டனர்.

— கிளிநொச்சி உருத்திரபுரம் பகுதிக்குள் நுழைய முற்பட்ட இராணுவத்தினர் பொதுமக்கள் மீது குண்டு வீச்சுத் தாக்குதலை மேற்கொண்டனர் இதனால் பாதிக்கப்பட்ட கே. சரோஜா, கே, ரவிச் சந்திரன் (வயது 16), ஆசிரியர் பொன்னம்பலம் (வயது 58), செல்வராஜா ஆகியோர் பலத்த காயங் களுடன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர்.

— செங்கலடி வைத்திய சாலையில் இராணுவத்தி னர் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் இளையதம்பி யோகபாலன் என்பவர் பலியானார் வைத்திய நிலைய டாக்டர் ராஜலிங்கம் படுகாயமுற்றார்.

— மலையகப் பகுதிகளில் இராணுவத் துருப்புக்கள் குவிக்கப்பட்டுத் தேடுதல் வேட்டை நடத்தப்பட்டு வருகின்றது. இத்தேடுதல் வேட்டையின் போது தேனீர்க்கடை உரிமையாளர் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டார்.

ஜூன்—6

— யாழ் கோட்டை இராணுவ முகாமிலிருந்து நடத்தப்பட்ட செல்தாக்குதலினால் கஸ்தூரியார் வீதியில் நின்ற 5 பேர் படுகாயமடைந்தனர்.

ஜூன்—6

— அரசபடையினரின் தாக்குதல்களைக் கண்டித்து யாழ் நகரில் ஆயிரத்திற்கு மேற்பட்ட மக்கள் ஆர்ப் பாட்ட ஊர்வலம் ஒன்றை நடத்தினர். ஒடுக்கப் படும் ஈழமக்கள் ஆர்ப்பாட்டக்குழு நடத்திய இவ் ஊர்வலம் காலை 9 - 30 மணிக்கு நாச்சியார் கோயிலடியில் இருந்து ஆரம்பிக்கப்பட்டது.

ஜூன்—7

— காலை 9 - 30 மணியளவில் கிளிநொச்சி ராணுவ முகாமிலிருந்தும் குண்டு வீச்சு விமானங்களிலிருந் தும் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. 50 க்கு மேற்பட்ட பொதுமக்கள் பலியானதுடன் நூற்றுக் கணக்கானோர் காயமுற்றனர் ஏராளமான மக்கள் காடுகளுக்குள் ஓடித் தஞ்சம் புகுந்துள்ளனர். பல வீடுகளும் தரை மட்டமாக்கப்பட்டது.

— வல்வெட்டித்துறை இராணுவ முகாமிலிருந்து நடத்தப்பட்ட பீரங்கித் தாக்குதலினால் எஸ். இராஜமோகன் (வயது 30), கந்தர்மடம் சுதன் (வயது 21), 8 வயது சிறுமி ஒருத்தி ஆகியோர் படுகாயமுற்றனர்.

— முல்லைத்தீவு ஒட்டிசுட்டான் இராணுவ முகா மிலிருந்து நடத்தப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத் தின் போது புதுக்குடியிருப்பைச் சேர்ந்த ஜெமன் (வயது 26) படுகாயமடைந்தார்.

— வ்சாவிளான் பகுதியில் இராணுவத்தினர் பல வீடுகளைத் தீயிட்டுக் கொளுததினர்.

ஜூன்—8

— கிளிநொச்சி ஆனந்தபுரத்தில் இராணுவத்தினர் மேற்கொண்ட ஹெலிகொப்டர் தாக்குதலினால், தாயின் அரவணைப்பில் உறங்கிக் கொண்டிருந்த 5 குழந்தைகளும் தாயும் படுகொலை செய்யப்பட்ட னர். பலியான குழந்தைகள் விபரம்:- கிருபாலினி (வயது - 1), பவானி (வயது - 4), புஷ்பராஜா (வயது - 5), செந்தில் குமார் (வயது 8), தயாபரன் (வயது 10).

ஜூன்—9

— சிங்கப்பூர் செல்வதற்காக கொழும்பு கட்டு நாயக்கா விமான நிலையத்தில் நின்று கொண்டி ருந்த 15 தமிழ் இளைஞர்கள் கைது செய்யப் பட்டனர்.

—வவுனியாவிலிருந்து திருகோண மலைக்கு பயணி களை ஏற்றிச் சென்ற மினிபஸ் ஒன்று கந்தளாய என்னுமிடத்தில் நிறுத்தி எரிக்கப்பட்டது. 10 வயது குழந்தை, 2 பெண்கள் உட்பட 8 பேரின் சடலங்கள் கருகிய நிலையில் காணப்பட்டது. மீதிப்பேர் என்ன ஆனார்கள் என்பது தெரியவில்லை.

ஜூன்—9

— கிளிநொச்சி ராணுவ முகாமிலிருந்து புறப்பட்ட இராணுவத்தினர் தரை மார்க்கமாகவும், ஆகாய மார்க்கமாகவும் நடத்திய தாக்குதலினால் கிளி நொச்சிப் பகுதியிலுள்ள பெருந் தொகையான வீடுகள் தரை மட்டமாகின. 6000க்கு மேற்பட்ட மக்கள் இருப்பிடங்களை விட்டுக் குடி பெயர்ந் துள்ளனர். இடிபாடுகளிடையே இருந்து மீட்கப் பட்ட சடலங்களின் விபரம் :

எஸ். வேலாயுதம் (வயது 27), சண்முகநாதன் (வயது 55), இராமலிங்கம் (வயது 28), தவராஜா (வயது 25), (சிவா வயது 15), (டயஸ் வயது 20), (அம்புலிங்கம் வயது 25) (சிங்கராஜா வயது 35) (தயாபரன் வயது 10).

— இன்று அதிகாலையில் காரைநகர் கடற்படை முகாமிலிருந்து பீரங்கித் தாக்குதல்கள் பொது மக்கள் குடியிருப்புக்களை நோக்கி மேற்கொள்ளப் பட்டனர்.

— கிளிநொச்சி கரடிப் போக்கு பகுதியில் உள்ள கிறிஸ்தவ தேவாலயம் ஒன்றினுள் புகுந்த ராணுவத் தினர், வணபிதா டயஸ் அவர்களைச் சுட்டனர். அவர் பலத்த காயத்துடன் மருத்துவ மனையில் சேர்க்கப் பட்டார்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



— தலவாக்கல, நுவரெலியா, மஸ்கெலியா, உடப்புசலாவ, ஹட்டன் ஆகிய தோட்டப் பகுதிகளில் தேடுதல் வேட்டை நடத்திய இராணுவத்தினர் ஏராளமான பொதுமக்களைக் கைது செய்தனர்.

— மண்டை தீவிலிருந்து கடலில் மீன் பிடிக்கச் சென்ற மீனவர்கள் 37 பேரை கறுப்பு உடையணிந்த கடற்படையினர் வெட்டிக் கொன்றனர்.

ஜூன்—10

— மண்டைதீவு கடற்படுகொலை நடவடிக்கையை எதிர்த்து யாழ்ப்பாணத்தில் பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.

ஜூன்—10

— வல்வெட்டித் துறை இராணுவ முகாமிலிருந்து ராணுவத்தினர் குண்டு வீச்சுத் தாக்குதலை மேற்கொண்டதில் 6 அப்பாவி மக்கள் கொல்லப்பட்டனர். 20 பேர் படுகாயமடைந்தனர்.

ஜூன்—11

— மண்டை தீவில் வீடு வீடாகப் புகுந்த சிறிலங்கா ராணுவத்தினர் வெறிகொண்டு துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். சோமசுந்தரம் ஜோதிநாதன் (வயது 60), விஸ்வநாதன் விமலநாதன் (வயது 22), அன்ரன் விஜயகுமார் ஆகியோர் கொல்லப்பட்டனர். 6 பேர் கைது செய்யப்பட்டனர்.

— வல்வெட்டித் துறை முகாமிலிருந்த ராணுவத்தினர் தாக்கியதில் பொதுமக்கள் மூவர் இறந்தனர். சிலர் காயமடைந்தனர். 30க்கு மேற்பட்ட வீடுகள் சேதமாக்கப்பட்டன.

— மட்டக்களப்பு களுவாஞ்சிக் குடியில் ரோந்து சென்ற ராணுவத்தினர், 6 இளைஞர்களைக் கைது செய்தனர். 27 வயது மதிக்கத்தக்க இளைஞரொருவரைச் சுட்டுக் கொன்றனர்.

ஜூன்—12

— வல்வெட்டித் துறையில் குண்டு வீச்சு விமானங்கள் தாக்குதலை மேற்கொண்டன. சோமியா (வயது 17), பிரசன்னா (வயது 5) என்னும் இரு சிறுவர்கள் குண்டு வீச்சுக்குப் பலியானார்கள். பல வீடுகள் சேதமுற்றன.

— யாழ் கச்சேரியடியில் ஈ. பி. ஆர். எல். எப். போராளிகளான ரமேஷ், ஈழமணி ஆகியோர் மீது எல். டி. டி. ஈ. இயக்கத்தினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். காயமடைந்த இருவரும் மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டனர்.

ஜூன்—13

— வவுனியாவில் ஆயுதப்படையினர் முகமூடி அணிந்த நபர்களைக் கூட்டிக் கொண்டு தேடுதல் நடத்தி 10 பேரை கைது செய்தனர்.

—திருமலையில் ராணுவத்தினர் 150 பேரைக் கைது செய்தனர்.

—மன்னாரை அடுத்துள்ள பரப்புக் கடந்தான், மாந்தை ஆகிய இடங்களில் ராணுவத்தினர் குண்டு வீச்சு விமானங்கள் மூலம் தாக்கியதில் 26 பேர் இறந்தனர். 13 வீடுகள் சேதமடைந்தன.

— மூதூர் பகுதியில் உள்ள ஈச்சிலம்பத்தையில் தமிழ் அகதிகளுக்கு உணவு எடுத்துச் சென்ற 3 அதிகாரிகள் 2 முஸ்லிம்கள் உட்பட 22பேர் ராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

ஜூன்—14

— வவுனியா, மாங்குளம், ஆனையிறவுப் பகுதிகளில் 15 இளைஞர்களை ராணுவத்தினர் கைது செய்தனர்.

— திருகோண மலையில் எரியுண்ட நிலையில் 3 சடலங்கள் மீட்கப்பட்டன. ஆண்டான் குளம் கணேஷ், தம்பிராஜா, அவரது மனைவி ஆகியோர்களே இறந்தவர்களாகும்.

— கொழும்பிலிருந்து வந்து கொண்டிருந்த பஸ் ஒன்றை வழி மறித்து ஏறிய ஊர்காவல் படையினர், வீனஸ் என்பவரைச் சுட்டுக் கொன்றனர்; 29 பேரைக் கடத்திச் சென்றனர்.

ஜூன்—15

— கிளிநொச்சிப் பகுதியில் உள்ள ஆனந்தபுரம், இரத்தின புரம், திருவையாறு போன்ற பகுதிகளில் குண்டு வீச்சு விமானங்கள் தாக்குதல் நடத்தின, பல வீடுகளும், பாடசாலைக் கட்டிடம் ஒன்றும், வாழைத் தோட்டங்களும் சேதத்துக் குள்ளாயின.

— யாழ், கோட்டை முகாமிலிருந்து கொட்டடிப் பக்கமாக நடத்தப்பட்ட செல் தாக்குதலினால் 2 பேர் காயமடைந்தனர். ஒரு வீடு முற்றாகச் சேதமடைந்தது.

ஜூன்—16

கொழும்பு கொள்ளுப் பிட்டியில் காரில் சென்று கொண்டிருந்த 5 தமிழ் இளைஞர்களை ராணுவத்தினர் கைது செய்தனர்.

— மயிலிட்டி மாதா கோவில் அருகே ராணுவத்தினர் சுட்டதில் 3 வயது சிறுமி தலை சிதறி மரணமானார். சிறுமியின் தாய் த. ராஜகுமாரி (வயது 23), சிசிலியா (61 வயது), சசீதரன் (வயது 12), சி. ஞானரஞ்சிதம் (வயது 53), எஸ். சியாமளா வயது 61) ஆகியோர் படுகாயமடைந்தனர்.

— தொண்டமானாறு கறுப்பு சட்டை ராணுவத்தினரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி மணல்மேடு நல்ல தம்பி உருத்திரகுமார் (வயது 17) பலியானார்.

ஜூன்—18

— பருத்தித்துறை ராணுவ முகாமிலிருந்து ராணுவத்தினர் மேற்கொண்ட செல்தாக்குதலினால்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பருத்தித்துறை புனித சேவியர் கட்டிடம் சேத மடைந்தது.

— கிளிநொச்சிப் பகுதியிலும் ராணுவத்தினர் செல் தாக்குதல் நடத்தியதைத் தொடர்ந்து மக்கள் இடம் பெயர்ந்த வண்ணமுள்ளனர்.

— ஏழாலை, கட்டுவன் பகுதியில் ஹெலிகொப்டர் தாக்குதல் நடத்தப்பட்டது. ஏழாலையைச் சேர்ந்த ராஜலட்சுமி நாதன், சிறிதேவி ஆகிய இருவரும் படுகாயமடைந்தனர்!

— மட்டக்களப்பு கருவாங்கேணி என்னுமிடத்தில் 7 தமிழர்களின் கண்களைத் தோண்டிய ராணுவத்தினர் பின்னர் அவர்களைக் கொலை செய்தனர்.

— வவுனியா மாவட்டத்தில் பம்பைமடு, திருவைக் காடு, ஞாலங்குளம் ஆகிய பகுதிகளில் ராணுவத் தேடுதல் வேட்டையின்போது 8 பேர் கைது செய்யப் பட்டனர்.

ஜூன்—19

— திருகோணமலை சாம்பல் தீவில் ராணுவ துப்பாக்கிச் சூட்டின்போது ராசசிங்கம் (வயது 51), கலா (வயது 55), செல்வம் (வயது 25), ஐசாக் (வயது 51), கனகசபாபதி சபாநாயகம் (வயது 28) என்னும் 5 பேரும் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

— வசாவிளான் கிறிஸ்தவ ஆலயத்தில் பிரார்த் தனை நடத்திக் கொண்டிருந்த மதகுரு வின்சன் (வயது 60) என்பவரை ராணுவத்தினர் வெட்டிக் கொன்றனர்.

— மன்னார் மாவட்டத்தைச் சுற்றிவளைத்த ராணுவத்தினர் 5 போராளிகளைக் கைது செய்தனர்.

ஜூன்—20

— கிளிநொச்சியில் விமானத் தாக்குதல் நடத்தப் பட்டது. 7-ம் வாய்க்கால் மகாவித்தியாலயக் கட்டிடம் ஒன்று முற்றாகச் சிதைந்தது. பரந்தனில் உள்ள பண்ணை ஒன்றும் சேதமானது.

இன்றுவரை உள்ள கணக்கீட்டின்படி கிளிநொச் சியில் 10,000 மக்கள் அகதிகளாகக் குடிபெயர்ந் துள்ளனர்.

ஜூன்—20

இலங்கை மக்கள் கட்சித்தலைவரும் சிங்கள நடிகருமான விஜயகுமாரணதுங்கா ஈழவிடுதலை அமைப்புக்களுடனும், அரசியல் கட்சித் தலைவர் களுடனும் பேச்சு வார்த்தை நடத்துதற்காக இந் தியா சென்றார்.

**21-06-86 அன்று ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் பிரதிநிதிகள், செயலாளர் நாயகம் தோழர். க. பத்மநாபா அவர்களின் தலைமையில், சென்னையில் சிறீலங்கா மக்கள் கட்சியின் தலைவர் விஜயகுமாரணதுங்க குழுவினருடன் கலந்துரை யாடினர்.**

**அது குறித்து ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் பேச்சாளர் தோழர் கேதீஸ்வரன் விடுத் துள்ள அறிக்கையில், இனவெறி பிடித்த சிறீலங்கா ஆட்சியினால் மேற்கொள்ளப் படுகின்ற இராணுவ நடவடிக்கைகள் குறித்து மனந்திறந்து கருத்துக் களைப் பகிர்ந்து கொண்டதாகவும், மேலும் சிங்கள பௌத்த மேலாதிக்க வாதத்தின் மீது ஜே. ஆர். ஆட்சி கட்டியெழுப்ப முற்படும் சிங்கள உணர்வை அழித் தொழிக்கும் வகையில் அதற்கெதிராகச் செயல்படும் பொருட்டு சிங்கள மக்கள் மத்தியில் வேலை செய்யும் ஜனநாயக முற்போக்கு சக்திகளின் தேவையினை ஈ. பி. ஆர். எல். எப். வலியுறுத்தியதாகவும் குறிப் பிட்டுள்ளார்.**

**செயலாளர் நாயகம் தோழர். பத்மநாபா அவர்கள், ஏனைய முற்போக்கு சிங்கள சக்திகளுடன் இணைந்து எஸ். எல். எம். பி. செயற்படும் எனத் தனது நம்பிக்கையைத் தெரிவித்தார் என்றும், உரையாடலின் முடிவில் இருபகுதியினரிடையேயும் தொடர்ச்சியான கலந்துரையாடல்களை ஏற்படுத்தும் வகையில் தொடர்புகளை ஒழுங்கமைத்துக் கொள் வதெனத் தீர்மானித்ததாகவும் அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

ஜூன்—21

— கொழும்பில் ராணுவத்தினர் தேடுதல் வேட்டை 200 தமிழர்கள் கைது செய்யப்பட்டனர்.

ஜூன்—22

— திருமலை கந்தளாய் கிராமத்திலுள்ள சந்தையில் குண்டு வெடிக்கப்பட்டது. 4 பொதுமக்கள் பலி யாகினர். 22 பேர் படுகாயமுற்றனர்.

— பூநகிரியில், குருநகரைச் சேர்ந்த மீனவர்கள் மூவரை ராணுவத்தினர் கைது செய்தனர்.

ஜூன்—23

— காஞ்சிக்குடாப் பகுதியில் இந்தியா நோக்கி வந்துகொண்டிருந்த அகதிகளின் படகை மடக்கிய சிறீலங்கா கடற்படையினர், அப்படகில் வந்து கொண்டிருந்த 34 அகதிகளையும் வெட்டிக் கொன்றனர்.

ஜூன்—24

— திருகோணமலை நகரத்தை முற்றுகையிட்ட முப்படைகளும் வீடுவீடாகத் தேடுதல் நடத்தினர். 5000 பேர் கைதுசெய்யப்பட்டனர். இதில் வயது முதிர்ந்தவர்கள் 500 பேரை விடுதலை செய்தனர்.

— மட்டக்களப்பு மாவட்டத்தில் இராணுவத் தேடுதல் வேட்டையின் பின் 316 பேர் கைது செய்யப் பட்டனர். 300 பேர் அக்கரைப்பற்று இராணுவ முகாமுக்கும், 16 பேர் கல்லடி இராணுவ முகா முக்கும் கொண்டு செல்லப்பட்டனர்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



— மன்னாரில் இராணுவத் தேடுதலின் போது 3 பேர் சுட்டுக் கொல்லப்பட்டனர். உயிலங்குளத் திலும் 13 வயது பாடசாலைச் சிறுவன் ஒருவனும் சுட்டுக் கொல்லப்பட்டான்.

ஜூன்—25

— அதுலத்முதலியின் இரகசிய அமெரிக்கப் பயணத் தைத் தொடர்ந்து, அமெரிக்கக் கடற்படையைச் சேர்ந்த 'டேவிட் அரே' எனப்படும் நாசகாரிக் கப்பலும் அதனோடு 30 போர்ப்படை வீரர்களும், 'கொபாய்ஜபார்' எனப்படும் கப்பலில் 175 போர்ப் படை வீரர்களும் கொழும்புத் துறைமுகத்தை வந்தடைந்தனர்.

ஜூன்—25

— திருகோணமலையில் கைதான 4500 தமிழர் களில் 900 பேர் பூசா தடுப்புக் காவல் முகாமுக்குக் கொண்டு செல்லப்பட்டனர். ஏனையோரில் பெரும் பாலோர் விடுதலை செய்யப்பட்டனர்.

— மன்னாரில் இராணுவத்தினர் சுட்டதில் பொது மக்கள் பலர் காயமுற்றனர்.

— திருகோணமலை தம்பல காமத்தில் ஆயுதங் களுடன் வந்த ஊர்காவல் படையினர் 7 குடும்பங் களைச் சேர்ந்த 30 பேரைக் கடத்திச் சென்று வெட்டிக் கொன்றனர்.

ஜூன்—26

— காரை நகர் கடற்படைமுகாமிலிருந்து நடத்தப் பட்ட பீரங்கித்தாக்குதலினால் சின்னத்தம்பி (வயது 58), சின்னத்தம்பி பாக்கியலட்சுமி (வயது 55) ஆகிய இருவரும் படுகாயமடைந்தனர். பல வீடுகளும் முற்றாகச் சேதப்பட்டன.

— 'ஈழம்' பற்றிய விளக்கத் துண்டுப்பிரசுரம் வாசித்துக் கொண்டிருந்த 3 அரசவர்த்தகக் கூட்டுத் தாபன ஊழியர்கள் (கே. வேலாயுதம், ஏ. பாலையா, பி. செல்லத்துரை) கைதுசெய்யப்பட்டனர்.

ஜூன்—27

— திருகோணமலை மாவட்டம் தம்பலகாமம், நிலா வெளிப் பகுதியில் தேடுதல் வேட்டை நடத்திய ராணுவத்தினர் 83 அப்பாவி மக்களைக் கைதுசெய் தனர். இவர்களுள் பெரும்பாலோர் முஸ்லிம் களாவர். மற்றும் ஹெலிகொப்டர் தாக்குதலினால் தம்பலகாமத்தைச் சேர்ந்த 3 பேர் கொல்லப் பட்டனர்.

— மட்டக்களப்பு களுதாவளையைச் சேர்ந்த சூசைப் பிள்ளை (வயது 36) என்பவர் ராணுவத் தினரால் கொலை செய்யப்பட்டார்.

— பலாலி ராணுவ முகாமுக்குப் புதிதாக நவீன பயிற்சி பெற்ற 400 கொமாண்டோக்கள் வந்தனர்.

— மட்டக்களப்பில் போராளிகள் முகாமை முற்று கையிடுவதாகச் சொல்லிய அரச படையினர் அப் பகுதி விவசாயிகள் 25 பேரைச் சுட்டுக் கொன்றனர்.

ஜூன்—28

— கிளிநொச்சியில் 8 தமிழர்களை மரத்தில் கட்டி வைத்துச் சித்திரவதை செய்த ராணுவத்தினர், பின்னர் அவர்களைப் படுகொலை செய்தனர்.

— திருகோணமலை தம்பலகாமப் பகுதியில் 34 சடலங்கள் காட்டுக்குள்ளிருந்து மீட்கப்பட்டன.

— மட்டகளப்பு களுவாஞ்சிக்குடியில் வீடுவீடாகப் புகுந்து வேட்டை நடத்திய அதிரடிப்படையினர் வாணன், குமார் என்பவர்களைச் சுட்டுக் கொன்றனர்.

கருகப்பன் கேணி கோவிலிலும் 4 பேரைக் கைது செய்தனர். ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டார்.

— நாவற்குழியில் ஹெலி கொப்டர் தாக்குதல் நடந் ததில் ஒருவர் கொல்லப்பட்டார்.

ஜூன்—30

— பருத்தித்துறை இராணுவ முகாமிலிருந்து நடத் தப்பட்ட செல்தாக்குதலினால் V. M. ரோட்டைச் சேர்ந்த மோகனா, சத்தியகலா (வயது 18), நிஷாந்தினி, ரமணன் (வயது 6) ஆகியோர் படுகாய முற்றனர்.

— தொண்டமானாறு இராணுவ முகாமிலிருந்து நடத்தப்பட்ட செல்தாக்குதலினால் ஒருவர் பலி யானார். 6 பேர் படுகாயமடைந்தனர்.

— கோப்பாயையும் கைதடியையும் இணைக்கும் பாலத்தை இராணுவத்தினர் குண்டு வைத்துத் தகர்த்தனர். பலவாகனங்கள் பாலத் தகர்ப்புக்குள் சிக்கிச் சேதமடைந்தன. பொதுமக்கள் இருவர் பலியாகினார்கள்.

— கிளிநொச்சி இராணுவ முகாமிலிருந்து நடத்தப் பட்ட செல்தாக்குதலினால் 9 பேர் பலியானார்கள். பலியானோர் விபரம்:- பரந்தனைச் சேர்ந்த நாகேஸ்வரன் சத்தியசீலன் (வயது 22), சுப்பையா (வயது 25), ஆறுமுகம் சிவஞானம (ருயது 22), நடராஜா (வயது 25), மணியம் (வயது 22), வில்சன் ஜோசப் (வயது 67), கதிரவேலாயுதம் கேதீஸ்வரன் (வயது 22), உதயன் (வயது 23) காமச் சந்திரன் (வயது 20).

ஜூலை—01

— பிற்பகல் பேசாலைக் கடலில் மீன் பிடித்து விட்டுக் கரையை நோக்கி வந்துகொண்டிருந்த படகின் மீது கடற்படையினர் துப்பாக்கிப் பிர யோகம் மேற்கொண்டனர். 5 மீனவர்கள் பலியாகி னர். இதேவேளை இன்னுமோர் படகில் வந்து கொண்டிருந்த 10 மீனவர்கள் படுகாயமடைந்தனர்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



— பருத்தித்துறை இராணுவ முகாமிலிருந்து நடத்தப்பட்ட குண்டு வீச்சுத் தாக்குதலினால் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 4 பேர் பலியாகினர். ரகு, ராம் (வயது 20), சிவக்கொழுந்து (வயது 50), செல்வி எஸ். பேரம்பலம் ஆகியோரே பலியானவர்களாகும்.

மேலும் இத்தாக்குதலினால், எஸ. பாமாதேவி (வயது 12), எஸ். சியாந்தா, கே. ராஜமலர் (வயது 25), சி செல்வராணி (வயது 22), உஷா கார்த்திகா (வயது 7), ந. விஜயகலா, எஸ். சிவபாக்கியம் (வயது 45), ரி. அபிராமசுந்தரி (வயது 40), ராமன் (வயது 6) ஆகியோர்கள் படுகாயமடைந்தனர்.

— திரிகோணமலை மாவட்டத்தில் ராணுவத்தினர் 48 மாணவர்களைக் கைது செய்து பூசா தடுப்பு முகாமுக்குக் கொண்டு சென்றதற்கு ஆட்சேபம் தெரிவித்து, பொதுமக்கள் இன்று பூரண ஹர்த்தாலும், உண்ணா விரதமும் மேற்கொண்டனர்,

ஜூலை—02

— மலையகப் பகுதியில் சிங்களக் காடையர்கள் நடத்திய தாக்குதலினால் 44 குடும்பங்கள் அகதிகளாயின. பல வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டன. காயமடைந்த பலர் மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டனர்.

— மட்டக்களப்பு இராணுவத்தேடுதல் வேட்டையின்பின் 10 பேர் கைதுசெய்யப்பட்டனர்.

ஜூலை—03

— குண்டுலோயா பொலிசார் 12 தோட்டத் தொழிலாளர்களைக் கைதுசெய்ததைத் தொடர்ந்து சுமார் 500 தோட்டத் தொழிலாளர்கள் பொலிஸ் நிலையம் முன்பாக ஆர்ப்பாட்டம் நடத்தினர்; 12 இளைஞர்களையும் விடுதலை செய்யும்படி கோஷமிட்டனர். இதன்பின் இளைஞர்கள் விடுதலை செய்யப்பட்டனர்.

— மாணவர்கள் இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்படுவதைக் கண்டித்து யாழ்ப்பரணத்தில் மாணவ மாணவியர் ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஒன்றை நடத்தினர். ஊர்வலத்தின் இறுதியில் இவர்கள் மனு ஒன்றை யாழ், கல்வி அதிகாரியிடம் கையளித்தனர்.

ஜூலை—4

— திருகோணமலை மாவட்டத்திலிருந்து பூசா முகாமுக்கு ராணுவத்தினரால் கைது செய்து கொண்டு செல்லப்பட்ட 497 இளைஞர்களில் சாந்தலிங்கம் (வயது 24) என்பவர் இறந்துள்ளார்.

ஜூலை—05

— திருகோணமலை வாவி வழியாக அகதிகளை ஏற்றி வந்துகொண்டிருந்த படகுகளை இராணுவத்தின் தாக்கினர், 8 தமிழ் அகதிகள் சூடுபட்டு இறந்தனர். 4 அகதிகளை இராணுவத்தினர் கைது செய்து கொண்டு சென்றனர்.

ஜூலை—06

— சிறீலங்கா கடற்படையினரால் கொல்லப்பட்ட இந்திய மீனவர்கள் மூவரின் சடலங்கள் வேலணையில் ஒதுங்கின.

ஜூலை—06

— காவலூர் கடற்கரைப் பகுதிகளில் ஹெலிகொப்டர் தாக்குதல் நடத்தப்பட்டது. பொது மக்கள் பலர் காயமடைந்தனர்.

— மட்டக்களப்பு கொக்கட்டிச் சோலைப் பகுதியில் ஹெலிகாப்டர் தாக்குதலினால் 10 பேர் பலியாகினர்; 25 வீடுகள் தீக்கிரையாகின! பலர் காயமடைந்தனர்.

— கடலில் படுகொலை செய்யப்பட்ட இந்திய மீனவர்களின் மேலும் 6 சடலங்கள் ஈழக் கரையில் ஒதுங்கின.

ஜூலை—07

— திருமலை ஆலங்கேணியில் இராணுவத்தினரின் துப்பாக்கிப் பிரயோகத்தில் 5 முஸ்லிம்கள் பலியானார்கள்.

ஜூலை—08

— மட்டக்களப்பு வவுணதீவில் இராணுவத் தேடுதல் வேட்டையின் போது 10 பேர் கொல்லப்பட்டனர்.

— தலவாக்கலையில் தமிழ் ஆசிரியர் ஒருவ சிங்களக் காடையர்களினால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

ஜூலை—09

— இராணுவத்தினர் கைது செய்த மாணவனை விடுவிக்கக் கோரி யாழ் பல்கலைக் கழக மாணவர்கள் பகிஷ்கரிப்பு போராட்டம் நடத்தினர்.

— திருமலை நகர சபையில் ஓய்வு பெற்ற பொறியியலாளர் தம்பியப்பா (வயது 60), அவரது மனைவி (வயது 45), மகள் செல்வரஞ்சினி (வயது 18). சாந்தினி (வயது 16), ஜோதிராஜ் (வயது 14) ஆகியோரை சிங்களக் குண்டர்கள் வெட்டிக் கொலை செய்துவிட்டுப் பின்னர் தீயிட்டுக் கொளுத்தினர்.

ஜூலை—10

— வவுனியா மாவட்டத்தைச் சுற்றி வளைத்த இராணுவத்தினர், வயலில் வேலை செய்து கொண்டிருந்த 3 தமிழர்களைச் சுட்டுக் கொன்றனர். 50க்கும் மேற்பட்டோரைக் கைது செய்து கொண்டு சென்றனர்,

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



— திருகோணமலை புல்லியப் பொத்தானை என்ற இடத்தில் 9ம் கட்டையில் தமிழர் குடியேற்றம் ஒன்றினுள் புகுந்த சிங்களக் குண்டர்கள் 12 தமிழர் களைச் சுட்டுக் கொன்றனர்; 8 பேர் படுகாய மடைந்தனர்.

ஜூலை—11

— வவுனியா பூவரசங்குளம் பகுதியில் இராணுவத் தினரால் படுகொலை செய்யப்பட்ட 4 பேரின் சடலங்கள் மீட்கப்பட்டன.

— மட்டக்களப்பு பாண்டிக் கிராமம் இராணுவத் தினரால் சுற்றிவளைக்கப்பட்டு 100 பொதுமக்கள் கைது செய்யப்பட்டனர்.

ஜூலை—12

— திருகோண மலையில் ராணுவத்தினர், 9 பேரைச் சுட்டுக் கொன்றனர்.

— கிளி நொச்சி வண்ணான் குளப் பகுதியில் டிராக்டரில் வந்த 2 பேரை ராணுவத்தினர் சுட்டுக் கொன்றனர்.

ஜூலை—13

— ஜெயவர்த்தனே நடத்தும் அரசியல் கட்சிகளின் மாநாட்டையும், மாகாணசபைத் தீர்வையும் எதிர்த்து யாழ் குடாநாட்டில் மாபெரும் ஆர்ப் பாட்ட ஊர்வலம் நடைபெற்றது.

— கிளிநொச்சியில் நூர்துநாதன் (வயது 45), ஐயாத்துரை (வயது 25) ஆகியோர் இராணுவத் தினரின் துப்பாக்கிச் சூட்டிற்குப் பலியாகினர்.

— மன்னார்அடம்பனில் இராணுவத்தினர் முஸ்லிம், தமிழ் மக்களின் 25 க்கும் மேற்பட்ட வீடுகள் கடை களைச் சேதப்படுத்தினர்.

— வவுனியா பாலங்குளத்தில் இராணுவத் தினரால் 11 பேர் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

ஜூலை—14

— மட்டக்களப்பு கிரான் பகுதியில் ரோந்து சென்ற ராணுவ்த்தினர் 24 வயதுடைய இளைஞ ரொருவரைச் சுட்டுக் கொன்றனர்.

— பருத்தித்துறை இராணுவ முகாமிலிருந்து குண்டு வீச்சுத் தாக்குதல் நடத்தப்பட்டது.

பலர் படுகாயங்களுடன் மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டனர்.

ஜூலை—15

— மட்டக்களப்பு காரைதீவில் ஊர்காவல் படை யினரின் தாக்குதலினால் ஒருவர் பலி: 3 பேர் காயமுற்றனர்.

— மன்னாரை அடுத்துள்ள அடம்பன் பகுதியில் இராணுவத்தினரால் கொலையுண்ட 41 பேரின் சடலங்கள் மீட்கப்பட்டன. 25 பேரைக் காண வில்லை என பொதுமக்கள் தெரிவித்தனர்.

ஜூலை—15

— ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி யாழ், குடாநாட்டில் புதிய தொலைக்காட்சி ஒளி பரப்பு ஒன்றை ஆரம்பித்தது.

ஜூலை—16

— மூதூரில் உள்ள 3 அகதி முகாம்களைச் சுற்றி வளைத்துத் தாக்கிய இராணுவத்தினர் 75க்கும் மேற்பட்ட தமிழ் அகதிகளைக் கொலை செய்தனர்.

ஜூலை—16

— இராணுவத் தாக்குதல்களை எதிர்த்து யாழ்ப் பாணத்தில் 150க்கும் மேற்பட்ட லொறிகள் மினி பஸ்கள் மாபெரும் பேரணி ஒன்றை நடத்தின,

ஜூலை—17

— முல்லைத் தீவிலிருந்து வவுனியா வந்து கொண் டிருந்த பிரயாணிகள் பஸ் மீது நெடுங்கேணியில் ஹெலிகொப்டர் தாக்குதல் நடத்தப்பட்டது. 10 பயணிகள் பலியாகினர். 12 பேர் படுகாயமுற்றனர்.

— கொழும்பில் 6 தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்பட்டனர்

— மட்டக்களப்பு களுவாஞ்சிக் குடியில் 100 இளைஞர்கள் கைது செய்யப்பட்டு பூசாமுகாமுக்குக் கொண்டு செல்லப்பட்டனர்.

ஜூலை—18

— யாழ் குடாநாட்டுக்கு புதிய நவீனரக குண்டு வீச்சு விமானங்களும், பீரங்கிப் படகுகளும் வந்தன.

## இரண்டாவது ஜூலைப் படுகொலைகள்

வடக்கு கிழக்கு பகுதிகளில் கடந்த 20 தினங் களில் (ஜூலை 01—ஜூலை 20) 232 தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். இம்மாதத்தில் கடந்த 20 நாட்களில்—

| | |
|---|---|
| திருகோணமலையில் | 78 பேரும், |
| மட்டக்களப்பில் | 24 பேரும், |
| அம்பாறையில் | 08 பேரும், |
| யாழ்ப்பாணத்தில் | 16 பேரும், |
| மன்னாரில் | 48 பேரும், |
| கிளிநொச்சியில் | 06 பேரும், |
| வவுனியாவில் | 23 பேரும், |
| முல்லைத் தீவில் | 11 பேரும், |
| நெடுங்கேணியில் | 18 பேரும், |

படுகொலை செய்யப்பட்டுள்ளனர். வடக்கு—கிழக்கு பகுதிகளில் சுமார் 80 பேரைக் காணவில்லை யென்றும், இதில் 37 பேர் திருகோண மலை

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மாவட்டத்தைச் சேர்ந்தவர்களென்றும் கணக்கிடப் பட்டுள்ளது.

ஜூலை—21

— மட்டக்களப்பு கரடியனாறு இராணுவ முகாமிற்கு அருகிலுள்ள பூஞ்சோலை என்னுமிடத்தில் இராணுவத்தினரின் துப்பாக்கிச் சூட்டினால் 9 தமிழர்கள் பலியாயினர்; 5 வீடுகள் தீக்கிரையாக்கப் பட்டன.

— கடந்த வாரம் பேசாலை, அடம்பன் பகுதிகளில் இடம் பெற்ற படுகொலைகளைக் கண்டித்து மன்னார் பகுதியில் பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப் பட்டது. இதே வேளை மன்னார் கோட்டை இராணுவ முகாமிலிருந்து நடத்தப்பட்ட குண்டு வீச்சுத் தாக்குதலினால் நகரின் பல்வேறு பகுதிக் கட்டிடங்கள் சேதமடைந்தன.

ஜூலை—22

— வல்வெட்டித்துறை இராணுவ முகாமுக்கு அருகே உள்ள தமிழர் வீடுகள் இராணுவத்தினரால் குண்டு வைத்துத் தகர்க்கப்பட்டன,

— அம்பாறை உடும்பன் குளம் பகுதியில் ரோந்து சென்ற இராணுவத்தினர் இரண்டு தமிழர்களை வெட்டிக் கொன்றபின் சடலங்களைத் தீயிட்டுக் கொளுத்தினர்.

ஜூலை—23

— மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள விளாவெட்டுவான் என்ற இடத்தில் தேடுதல் வேட்டை நடத்திய இராணுவத்தினர் நூற்றுக்கு மேற்பட்டோரைக் கைது செய்தனர்.

ஜூலை—25

— வல்வெட்டித் துறைக் கடலில் மீனவர் படகுகள் மீது ஹெலிகொப்டரிலிருந்து குண்டுவீச்சுத் தாக்குதல் நடத்தப்பட்டதில் பல படகுகள் கடலில் மூழ்கின. படகிலிருந்தவர்களில் சிலர் நீந்திக் கரை சேர்ந்தனர்.

— அநுராதபுரம் மாவட்டத்திலுள்ள மிகிந்தலை என்னுமிடத்தில் தமிழர் ஒருவருக்குச் சொந்தமான லொறி ஒன்று இனம் தெரியாத கும்பல் ஒன்றினால் சுற்றி வளைத்து தீயிடப்பட்டது. லொறியிலிருந்தவர்கள் என்ன ஆனார்கள் என்ற விபரம் கிடைக்கவில்லை.

ஜூலை—22

— வவுனியா அருகே பயணிகளை ஏற்றி வந்த பஸ் ஒன்று கண்ணி வெடியில் சிக்கியதால் 30 பேர் உயிரிழந்தனர்.

ஜூலை—23

— வவுனியா சந்தையில் பொருட்களை இறக்கிக் கொண்டிருந்த லொறி ஒன்றின் அருகே குண்டு வெடித்ததில் 11 பேர் மாண்டனர்.

ஜூலை—24

— வவுனியா பகுதியில் பஸ் ஒன்றினுள்ளிருந்த குண்டு வெடித்ததால் பஸ் இரண்டாகப் பிளந்தது 31 பயணிகள் உயிரிழந்தனர்.

### ஈ. பி. ஆர். எல். எப். கண்டனம்

ஜூலை—25

வவுனியா பகுதியில் கடந்த சில தினங்களாக வெடிகுண்டுகளுக்கும் கண்ணி வெடிகளுக்கும் பயணிகள் பஸ்கள் இரையாகி வருகின்றன. இந்த சம்பவங்களில் 50க்கும் மேற்பட்டோர் இதுவரையில் பலியாகியுள்ளனர்.

இந்தச் சம்பவங்களில் பலியானவர்களும் காயமடைந்தவர்களும் பெரும்பாலும் சிங்களவர்களாவர் இந்த சம்பவங்களுக்கு ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி பத்திரிகை அறிக்கையொன்றில் கடும் கண்டனத்தைத் தெரிவித்திருக்கிறது.

சிங்கள ராணுவத்திற்கு எதிராகத்தான் தாக்குதல்களை நடத்த வேண்டுமேயொழிய, அப்பாவி சிங்கள மக்களுக்கு எதிராக அல்ல என்றும், இந்தச் சம்பவங்களுக்குப் பொறுப்பானவர்கள் உடனடியாக இத்தகைய செயல்களைக் கைவிட வேண்டும் என்றும் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி வற்புறுத்தி இருக்கிறது.

ஜூலை—25

இரத்த ஜூலை 3வது ஆண்டு நினைவாக ஈழப் பிரதேசம் எங்கும் துக்கம் அனுஷ்டிக்கப்பட்டது.

ஈ. பி. ஆர். எல். எப். இன் இங்கிலாந்து, சுவிட்சர்லாந்து பிரான்சு, ஜெர்மனி பிரிவுகள் கறுப்பு ஜூலையை நினைவு கூரும் முகமாக கொடி தினம் ஒன்றைப் பிரகடனப்படுத்தின.

ஜூலை—01 ராமேஸ்வரம் கடலில் காணாமல் போன படகை கண்டுபிடிக்கச் சென்ற தமிழ் நாட்டு மீனவர்கள் மீது சிறீலங்கா கடற்படையினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் 9 மீனவர்கள் கொலையுண்டனர்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஜெயவர்த்தனாவின் சமரச திட்டம் புதிய மொந்தையில் பழைய கள்ளு

ஜூன்—17

— ஜே. ஆர். ஜெயவர்த்தனாவின் புதிய சமரசத் திட்டம் பற்றி சிறீலங்கா அமைச்சரவை கூடி விவாதித்து, சமரசத் திட்டத்தை ஏற்றுக் கொண்டதாக அறிவித்தது. ஜூன் 25ம் திகதியில் அனைத்துக் கட்சிக் கூட்டம் கூடவிருப்பதாகவும் அறிவிப்பு.

ஜூன்—18

— ஜெயவர்த்தனாவின் புதிய சமரசத்திட்டம் தூதர் திலகரத்னா மூலம் டெல்லிக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

— இனப்பிரச்சினை தொடர்பாக ஜெயவர்த்தனா கூட்டவுள்ள அனைத்துக் கட்சிக் கூட்டத்தைப் புறக்கணிப்பது என்று சிறீமாவோ பண்டாரநாயகாவின் சிறீலங்கா சுதந்திரக் கட்சி முடிவு செய்தது.

ஜூன்—19

— ஜெயவர்த்தனாவின் புதிய மாநில கவுன்சில் திட்டத்தை எதிர்த்து ENLF உம், TULF உம் திட்ட அறிவிப்பு, சிறீலங்கா அரசின் போலி நடவடிக்கையே எனக் கண்டனம் தெரிவித்தன.

ஜூன்—22

— இந்தியாவின் நல்லெண்ண முயற்சியால் தொடங்கப்பட்ட சமரச தீர்வுக்கான அடிப்படைகளுக்கு எதிரானது என்பதால், சிறீலங்கா அரசின் அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி (TULF) கலந்து கொள்ளாது என அமிர்தலிங்கம் அறிவித்தார்.

ஜூன்—22

— சிறீலங்கா அரசின் இராணுவ நடவடிக்கைகள் ஓயும் வரை ஈழப்போராளிகள் ஆயுதங்களைக் கீழே போடத் தேவையில்லை என விஜயகுமாரனதுங்க சென்னையில் பேட்டியளித்தார்.

ஜூன்—23

— இலங்கை அரசின் புதிய சமரசதிட்டம் திருப்தி அளிப்பதாக இல்லை என்று இந்திய வெளிவிவகார அமைச்சர் சிவசங்கர் அறிவிப்பு. இந்தியாவுக்கு தொல்லை கொடுக்க பாகிஸ்தான், இஸ்ரேலிடமிருந்து சிறீலங்கா ஆயுதம் வாங்குகிறது என்றும் அவர் தெரிவித்தார்.

ஜூன்—25

— ஈழப் போராளிகளை ஒடுக்க பாகிஸ்தான்—இஸ்ரேலிடம் ஆயுதம் வாங்குவேன் என்று ஜெயவர்த்தனா திமிர் பேச்சு.

— ஈழப்போராளிகளிடம் புதிய சமரச திட்டத்தை ஒப்படைக்க இந்திய அரசு ஏற்பாடுகளைச் செய்தது.

ஜூலை—06

— சர்வகட்சிக் கூட்டத்தில் TULF கலந்துகொள்ளும் என்று கொழும்பிலிருந்து வந்த செய்தியை சென்னையில் TLUF மறுத்தது.

ஜூலை—07

ஜெயவர்த்தன அளித்துள்ள சமரசதிட்டம் பற்றி சிறீலங்கா அரசுடன் நேரடிப் பேச்சுவார்த்தை நடத்தப் போவதாக தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி (TULF) அறிவித்தது.

ஜூலை—08

— ஜெயவர்த்தனவின் பிரேரணைகளில் பெரியளவு முரண்பாடுகள் உள்ளதாகவும், தமிழர்குழுக்களுடன் மீண்டும் பேச்சுவார்த்தைகளைத் தொடங்கவிடாமல் இவை குறுக்கிடுவதாகவும் இந்திய அரசு தெரிவித்தது.

ஜூலை—10

— பச்சிளம் குழந்தை உட்பட 11 தமிழர்களை திருகோணமலையில் ராணுவத்தினர் சுட்டுக் கொன்றனர் திருகோணமலையில் தொடர்ந்து ஊரடங்குஉத்தரவு அமுலிலுள்ளது.

ஜூலை—11

— ஜெவர்த்தனாவுடன் பேச்சு நடத்த TULF குழுவினர் கொழும்பு பயணமானார்கள்.

ஜூலை—12

— சிறீலங்கா அரசின் திட்டத்திற்குப் பாராட்டு தெரிவித்து ஜெயவர்த்தனாவுக்கு ரீகன் கடிதம்.

— ஜெயவர்தனாவுடன் பேசுவதற்குத் திறந்த மனதுடன் வந்திருப்பதாக கொழும்பில் அமிர்தலிங்கம் பேட்டி.

ஜூலை—15

— சிறீலங்கா அரசு கூறியுள்ள யோசனைகளின் வரம்புக்குட்பட்டுத்தான் தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி மற்றும் இந்திய அரசு ஆகியவற்றுடன் உடன்பாடு செய்து கொள்ளப்படும் என்று ஜெயவர்த்தனா அறிவிப்பு.

ஜூலை—17

— தமிழ்க் கிராமங்களைச் சுற்றிவளைத்து சிறீலங்கா கறுப்புப் படை தாக்கியதில் 155 பேர் பலியானார்கள்.

www.tamilarangam.net



## ஈழ தேசிய விடுதலை முன்னணியின் நிலைப்பாடு

திம்பு பேச்சு வார்த்தைகளின் போது முன்வைக்கப்பட்ட 4 அடிப்படைப் பிரேரணைகளையும் திருப்தி செய்யக் கூடிய அரசியல் திட்டத்தை சிறீலங்கா அரசாங்கம் முன் வைக்காத வரை தாங்கள் சிறீலங்கா அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்தத் தயாராயில்லை என்றும், சிறீலங்கா அரசாங்கம் தற்போது முன்வைத்துள்ள அரசியல் தீர்வானது ஒரு புதிய விடயமல்ல என்றும், இந்த அரசியற் பிரேரணைகள் எதுவும் திம்புவில் முன்வைக்கப்பட்ட எந்த ஒரு பிரேரணையையும் திருப்தி செய்வதாக இல்லை என்றும், எனவே தாம் அதை முற்றாக நிராகரிப்பதாகக் கூறி, சிறீலங்கா அரசுடனான பேச்சு வார்த்தையை ஈழதேசிய விடுதலை முன்னணி (ENLF) நிராகரித்தது.

அதுமட்டுமல்லாது பேச்சுவார்த்தை என்று கூறும் சிறீலங்கா அரசாங்கம், தொடர்ந்தும் தனது அரசபடைகள் மூலமும், சிங்களக் குண்டர்கள் மூலமும் ஈழமக்கள் மீது மேற்கொண்டு வருகின்ற இராணுவக் கொடூரங்களை ஈழதேசிய விடுதலை முன்னணியின் தலைவர்கள் திரு. ஜி. பார்த்தசாரதி, திரு. ஏ. பி. வெங்கடேஸ்வரன்—இந்திய வெளியுறவுச் செயலாளர்—ஆகியோரிடம் விரிவாக எடுத்துக் கூறினர்.

டெல்லியிலிருந்து சென்னை திரும்பிய ஈழதேசிய விடுதலை முன்னணி (ஈ. என். எல். எப்.)த் தலைவர்கள் இந்தியா நியாயத்தின் பக்கமே நிற்பதாக உறுதியுடன் தெரிவித்தனர்.

---


## ஈழப் போராளி

### இரண்டாவது இதழ் வெளி வருகிறது!

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் வெளியீடான
'ஈழப்போராளி' (ஜுலை—ஆகஸ்ட் இதழ்)
வெளி வருகிறது.

''சுதந்திரத்திற்காகவும்
சுபிட்சமான வாழ்விற்காகவும்
ஆயுதமேந்திப் போராடிக் கொண்டிருக்கும்
ஈழதேச மக்களின்
போராட்ட முறைமை பற்றியும்
எமது அமைப்பு பற்றியும்
சரியான தெளிவான
தகவல்களைத் தருவதை
'ஈழப்போராளி' தனது
கடமையாகக் கருதுகிறது''

தனி இதழ்—ரூபா 1. 00
12 இதழ்கள்—ரூபா 15. 00

உங்கள் சந்தாப்பணமாக ரூபா 15. 00 மணியார்டராகவோ (Money order) டிராப்டாகவோ (Draft) அனுப்பி, தொடர்ந்து 12 'ஈழப் போராளி' இதழ்களை தபால மூலமாகப் பெற்றுக் கொள்ளுங்கள்.

வங்கிக் கணக்கு
EPIC
A/c
State Bank of India
Kodambakkam,
Madras-24
India.

முகவரி
EPIC
20, Main Street,
Zackria, Colony
Choolai medu
Madras-94
India.


---

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# அரச பயங்கர வாதத்திற்கெதிராக ஈழப்போராளிகளின் ஆயுதப் போராட்ட நடவடிக்கைகள்

ஜூன்—01

— மண்டைதீவில் இருந்து கோட்டை இராணுவ முகாமிற்கு வந்து கொண்டிருந்த ராணுவத்தின் மீது ஈழப் போராளிகள் மேற் கொண்ட கண்ணி வெடித் தாக்குதலில் 10 ராணுவ வீரர்கள் கொல்லப் பட்டனர். கவசவாகனம் நிர்மூலமாகியது. பண்ணைப் பாலமும் சேதமடைந்தது.

ஜூன்—07

— பருத்தித் துறைக் கடலில் இராணுவத்தினருக்கு உணவுப் பொருட்கள் ஏற்றிவந்த பீரங்கிப் படகைக் கரை சேர விடாது ஈழப் போராளிகள் தாக்கினர். கப்பலில் இருந்தும் வல்வெட்டித் துறை முகாமிலி ருந்தும் இராணுவத்தினர் எதிர்த் தாக்குதல் நடத்தியதால் பலத்த மோதல் ஏற்பட்டது.

ஜூன்—09

— ஈ. பி. ஆர். எல். எப்-இன் மக்கள் விடுதலைப் படையினர் (PLA) மன்னார் பகுதியில் வாகனத்தில் வந்த இராணுவத்தினரைக் கண்ணிவெடி வைத்துத் தாக்கினர் 18 சிப்பாய்கள் மாண்டனர். ஆயுதங் களைப் போராளிகள் கைப் பற்றினார்கள்.

ஜூன்—10

மண்டைதீவு கடலில் கடற்படையினரால் வெட்டிக் கொலை செய்யப்பட்ட 37 மீனவர்களின் சடலங்களையும் ஈ. பி. ஆர். எல். எப் போராளிகள் கொண்டு வந்து கரை சேர்த்தனர் கை, கால் வெட்டப்பட்டு கண்கள் தோண்டப்பட்ட நிலையில் சிறுவர்களும், இளைஞர்களுமாய் இறந்திருந்த சடலங்கள் அடக்கம் செய்யப்பட்டன.

இதைத் தொடர்ந்து மண்டைதீவில் அந்தக் கறுப்புச் சட்டைப் படையினர் தங்கியிருந்த முகாம் மீது ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (EPRLF) யின் மக்கள் விடுதலைப்படை (LPA) போராளிகள் மோட்டார் பீரங்கித் தாக்குதல் நடத்தினர். 19க்கும் மேற்பட்ட இராணுவத்தினர் ஸ்தலத்திலேயே பலியானார்கள்.

இதே நேரத்தில் போராளிகளை எதிர்த்துத் தாக்குவதற்கென ராணுவத்தினருக்கு உதவியாக வந்த ஹெலிக்கொப்டரினை "தாஸ்கிராக்" (DASS KRAK) என்னும் விமான எதிர்ப்புப் பீரங்கி கொண்டு மக்கள் விடுதலைப் படையினர் தாக்கியதைத் தொடர்ந்து ஹெலிக்கொப்டர் உடனடியாக கோட்டை இராணுவ முகாமுக்கு மீண்டது.

ஜூன்—14

வல்வெட்டித் துறை முகாமிலிருந்து ராணுவத் தினர் வெளியேறிய போது ஈழப் போராளிகள் தாக்குதல் மேற் கொண்டனர். இதில் 6 சிங்கள ராணுவத்தினர் மாண்டனர்.

— கிளிநொச்சி ராணுவ முகாமிலிருந்து ராணுவத் தினர் வெளியேறிய போது ஈழப் போராளிகள் எதிர்த் தாக்குதலை மேற்கொண்டனர்.

***சிறீலங்கா கடற்படையினருடன் ஈ. பி. ஆர். எல். எப். இன் மக்கள் விடுதலைப் படையின் நேரடி மோதலும்,***

***'அன்னை மேரி' படகில் வந்த அகதிகள் மீட்பு பற்றிய விவரமும்.***

16-06-86 மாலை 6 மணியளவில் யாழ்ப்பபணம் குருநகரிலிருந்து 'அன்னை மேரி' என்னும் படகில் 27 அகதிகள் இந்தியா நேர்க்கிப் பயணமானார்கள். 17-06.86 அன்று மாலை 5 மணியளவில் அந்தப் படகு இரணை தீவில் மேலும் 5 பேரை ஏற்றிக் கொண்டு மொத்தம் 32 பேராகப் பயணப்பட்டனர். அன்றிரவு 10 மணியாளவில் ராமேஸ்வரம் கடல் எல்லைக்குள் இப்படகு வந்து கொண்டிருந்த போது 'ஜெயசேகர' என்னும் சிங்களக் கடற்படைக் கப்பலி னால் கைப்பற்றப்பட்டது.

அகதிகளை ஏற்றி வந்த படகில் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் மக்கள் விடுதலைப் படையைச் சேர்ந்த 4 தோழர்களும், 5 முஸ்லிம் வியாபாரிகளும், மற்றும் சில குடும்பங் களும் 3 படகு ஓட்டிகளும் பயணம் செய்தனர். படகிலிருந்தோரில் 4 பெண்களும் இருந்தனர். இவர்கள் அனைவரும் படகில் வைத்தே சிறீலங்கா கடற்படையினரால் மிருகத் தனமாகத் தாக்கப் பட்டனர். பெண்களைக் கொடூரமான சித்தர வதைகளுக்குள்ளாக்கினர். அனைவரையும் தலை மன்னாருக்கு அழைத்துச் சென்ற கடற்படையினர், 19-06-86 நண்பகல் 12 மணியளவில் ராணுவத் தினரிடம் இவர்களை ஒப்படைத்தனர். அனை வரையும் மன்னார்—தள்ளாடி முகாமுக்கு அழைத்துச் சென்ற இராணுவத்தினர் கட்டி வைத்துச் சித்திரவதை செய்தனர்.

பின்னர் பலாலி ராணுவ முகாமுக்கு அனுப்பி வைப்பதற்காக 32 பேரும் படகொன்றில் ஏற்றப் பட்டனர். அப்படகில் ஆயுதங்களுடன் 2 இராணுவத் தினரும், பின்னால் பாதுகாப்புக்கென அனுப்பப்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பட்ட 'ஸ்பீட் போட் ரோலரில்' தள்ளாடி ராணுவக் காப்டன் உட்பட 5 படையினருமாக படகுகள் பலாலி இராணுவ முகாம் நோக்கி புறப்பட்டன.

2½ மணி நேர பயணத்தின் பின் எருக்கலம்பிட்டி முனைக்கு படகுகள் வந்ததும், ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின மக்கள் விடுதலைப்படைத் தோழர்கள் நால்வரும் துரிதமாகச் செயற்பட்டனர். அகதிகளுடன் சேர்ந்து கொண்டு ஆயுதபயிற்சி பெற்ற மக்கள் விடுதலைப் படைப் போர் வீரர்கள் நால்வரும் வருவதை அறிந்திராத இராணுவத்தினர் அசிரத்தையாக உட்கார்ந்திருந்தனர். ஆயுதங்களுடன் அமர்ந்திருந்த ராணுவத்தினர் இருவரையும் மக்கள் விடுதலைப் படைத் தோழர்களில் ஒருவர் மின்னல் வேகத்தில் பாய்ந்து மடக்கினர். மற்றைய இரு தோழர்களும் கண்மூடித் திறக்கும் நேரத்தில் இராணுவத்தினரிடமிருந்த இரண்டு நவீனரக இயந்திரத் துப்பாக்கிகளையும் தங்கள் கைகளில் எடுத்துக் கொண்டனர்.

முதலில் படகிலிருந்த இரண்டு இராணுவத்தினரையும் தோழர்கள் சுட்டு வீழ்த்தினர். அதன் பின்னர், பின்னால் பாதுகாப்புக்கு வந்து கொண்டிருந்த ஸ்பீட் ரோலரில் வந்த ராணுவத்தினரோடு துப்பாக்கிச் சமரை ஆரம்பித்தனர். ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின மக்கள் விடுதலைப் படைத் தோழர்களின் தொடர்த் துப்பாக்கிச் சூட்டுத் தாக்குதலை எதிர்நோக்க முடியாது சிரமப்பட்ட 5 ராணுவத்தினரில் 3 பேரை தோழர்கள் சுட்டு வீழ்த்தினர். துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியான மூவரில் இரண்டு இராணுவத்தினரும் ரோலரைத் திருப்பிக் கொண்டு பின்வாங்கி ஓடினர்.

துப்பாக்கிச் சூட்டின்போது ஏற்பட்ட களபேரத்தில் படகில் வந்த பெண்மணிகளில் ஒருவர் கடலில் விழுந்து உயிரிழந்தார். மற்றும் இரு முஸ்லிம்கள் தப்புவதற்காக கடலில் பாய்ந்தனர். அவர்கள் என்ன ஆனார்கள் என்பது தெரியவில்லை.

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணித் தோழர்களால் காப்பாற்றப்பட்ட மற்றைய அகதிகள் அனைவரும் மன்னாருக்கு அருகில் பத்திரமாகக் கரை சேர்ந்தனர். இவர்களனைவரையும் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியைச் சேர்ந்த தோழர்கள் வந்து அழைத்துச் சென்றனர்.

ஜுன்—17

மன்னார் முள்ளிக்குளம் பகுதியில் கனரக வாகனங்களில் வந்த இராணுவத்தினர் மீது ஈழப் போராளிகள் கடுமையான தாக்குதல் நடத்தியதில் 2 இராணுவ வீரர்கள் பலியானதுடன் பல வீரர்கள் படுகாயமடைந்தனர்

ஜுன்—18

வசாவிளான் தற்காலிக இராணுவ முகாமிலிருந்து 100க்கும் மேற்பட்ட இராணுவத்தினர் வெளியேற முயன்றபோது. ஈ. பி. ஆர். எல். எப் இன் மக்கள் விடுதலைப் படையினர் (P. L. A) மிக உக்கிரமான தாக்குதலில் மேற் கொண்டனர், இத் தாக்குதலின்போது 12 இராணுவ வீரர்கள் கொல்லப் பட்டனர்; பல இராணுவ வீரர்கள் படுகாயம் அடைந்தனர்.

ஜுன்—18

காரைநகர் கடற்படை முகாமில் இருந்து ஊர்காவற்துறைக்கு இரு பீரங்கிப் படகில் வந்த கடற்படையினரை கரை சேர விடாமல் ஈ. பி. ஆர். எல். எப் இன் மக்கள் விடுதலைப் படையினர் (P. L. A) மோட்டார்த் தாக்குதல் நடத்தியதில் 17 கடற்படை வீரர்கள் கொல்லப் பட்டனர்; பீரங்கிப் படகு முற்றாகத் தகர்க்கப் பட்டது; மற்றுமொரு படகு சிறு சேதங்களுடன் தப்பிக் கொண்டது.

ஜுன்—19

வல்வெட்டித்துறை இராணுவ முகாமில் இருந்து வெளியேற முயன்ற இராணுவத்தினர் மீது ஈழப் போராளிகள் தாக்குதல் நடத்தியதில் 3 இராணுவ வீரர்கள் உயிர் இழந்தனர்.

ஜுன்—19

திருக் கோயில் இராணுவ முகாமிலிருந்து புறப் பட்ட இராணுவ ஜீப்வண்டி ஒன்றின் மீது ஈழப் போராளிகள் குண்டு வீசியதில் அதில் பிரயாணம் செய்த பல கொமாண்டோக்கள் பலத்த படுகாயம் அடைந்தனர்.

ஜுன்—20

கோட்டை இராணுவ முகாமில் நங்கூரம் இடப் பட்டிருந்த இராணுவப் பிளாஸ்டிக் படகு ஒன்று ஈழப் போராளிகளினால் சேதமாக்கப் பட்டது.

ஜுன்—20

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பகுதிக்கு ரோந்து சென்றிருந்த இராணுவத்தினர் அப்பாவி மக்களைத் தாக்கிவிட்டு திரும்பும் வழியில் ஈ. பி. ஆர். எல். எப்- இன் மக்கள் விடுதலைப் படை (PLA) யானது ஸ்ரீலங்கா இராணுவ வெறியர்களின் மீது தாக்குதல் தொடுத்தது. 7 இராணுவத்தினர் ஸ்தலத்திலேயே மாண்டனர் 25 பேர் படுகாயங்களுடன் எடுத்துச் செல்லப்பட்டனர்.

ஜுன்—22

முல்லைத்தீவுக் கடலில் ஈழப் போராளிகளுக்கும் கடற் படையினருக்கும் இடையில் ஏற்பட்ட மோதலில் 3 கடற்படை வீரர்கள் கொல்லப் பட்டனர் 5 கடற்படை வீரர்கள் படுகாயம் அடைந்தனர்.

ஜுன்—22

வசாவிளான் பகுதியிலிருந்து புறப்பட்ட ராணுவத்தினரை E. P. R. L. F இன் (P. L. A) போராளிகளும் ஏனைய இயக்கங்களைச் சேர்ந்த போராளிகளுமாகச் சேர்ந்து இடைமறித்து தாக்கினர். இராணுவம் பின் வாங்கியது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஜூன்—23

நாவற்குழி ராணுவ முகாமிலிருந்து வெளியே வர முற்பட்ட கறுப்புச் சட்டை ராணுவத்தினரை எதிர்த்து EPRLF இன் மக்கள் விடுதலைப் படை (PLA) போராளிகள் தாக்குதல் தொடுத்தனர். PLA மேற்கொண்ட மோட்டார் பீரங்கித் தாக்குதலினால் 10 ராணுவத்தினர் ஸ்தலத்திலேயே பலியானார்கள்.

ஜூன்—23

குண்டு வீச்சு விமானப் பாதுகாப்புடன் முல்லைத் தீவு இராணுவ முகாமிலிருந்து புறப்பட்ட ராணுவத்தினரை EPRLF இன் மக்கள் விடுதலைப் படையும், தமிழீழ மக்கள் விடுதலைக் கழகமும் (PLOT) எதிர்த்துத் தாக்கினர் 12 இராணுவ சிப்பாய்கள் கொல்லப்பட்டனர். 17 பேர் படுகாயம் அடைந்தனர். குண்டு வீச்சு விமானங்களை EPRLF இன் ''தாஸ்கிராக்'' (DASSKRAK) என்ற விமான எதிர்ப்புப் பீரங்கிகளைக் கொண்டு தாக்கியதில் விமானங்கள் திரும்பிச் சென்றன.

ஜூன்—25

பருத்தித்துறை இராணுவ முகாமிலிருந்து கந்தர் மடம் நோக்கி வந்து கொண்டிருந்த ராணுவத்தினரைப் போராளிகள் தாக்கியதில் 6 இராணுவச் சிப்பாய்கள் ஸ்தலத்திலேயே கொல்லப் பட்டார்கள்.

ஜூன்—26

கந்தளாயில் கடமையில் ஈடுபட்டிருந்த ஊர் காவல் படையினர் மீது ஈழப் போராளிகள் கைக் குண்டு வீசியதில் 1 ஊர்காவல் படை வீரர் கொல்லப் பட்டார். 2 பேர் படுகாயம் அடைந்தனர்.

ஜூன்—26

முல்லைத்தீவு இராணுவ முகாமை விட்டு வெளி யேறிய இராணுவத்தினர் மீது ஈழப் போராளிகள் கடுமையான தாக்குதல் மேற் கொண்டதனால் இராணுவத்தினர் திரும்பவும் முகாமுக்குள் சென்றனர்

ஜூலை—02

மட்டக்களப்பு கதிரவெளி எனும் இடத்தில் ஈழப் போராளிகள் இராணுவத்தினர் வந்த வாகனத்தைக் கண்ணி வெடி வைத்து தாக்கினர். இதில் 4 இராணுவ வீரர்கள் படுகாயம் அடைந்தனர்.

ஜலை—04

முல்லைத் தீவு இராணுவ முகாமிலிருந்து மாங் குளம் வீதி வழியாக முள்ளிய வளை சென்ற 200 இராணுவத்தினர் மீது ஈழப் போராளிகள் தாக்குதல் நடத்தியதில் பல இராணுவ வீரர்கள் படுகாயம் அடைந்தனர் இராணுவத்தினர் தொடர்ந்து செல்லும் முயற்சியைக் கைவிட்டனர்

ஜூலை—04

திருமலை பாலம்பட்டாறு எனும் இடத்தில் 20 ஊர்காவல் படையினர் ஆயுதங்களுடன் ஈழப் போராளிகளினால் கைது செய்யப்பட்டனர்.

ஜூலை—06

மட்டுநகர் திருமலை இணைப்பு வீதியில் உள்ள ராணுவ முகாமை ஈழப் போராளிகள் தாக்கினர். இராணுவத்தினரில் 2 பேர் இறந்தனர்; 3 பேர் படுகாயமடைந்தனர்.

ஜூலை—07

மட்டு நகர் மாங்கேணி எனும் இடத்தில் ஈழப் போராளிகளின், கண்ணி வெடித் தாக்குதலில் சிக்கி 2 பொலிஸார் கொலையுண்டனர்; 4 பேர் படுகாயமடைந்தனர்.

ஜூலை—09

திருகோணமலையில் ஊர்காவல் படை யினரிடமிருந்து 58 ரைபிள்களையும் தோட்டாக் களையும் ஈழப் போராளிகள் கைப்பற்றினர்.

ஜூலை—12

மீண்டும் மட்டக்களப்பு மாங்கேணி எனும் இடத்தில் வாகனத்தில் வந்த பொலிசார் மீது ஈழப் போராளிகள் தாக்குதல் தொடுத்ததில் ஒரு பொலிஸ் காரர் கொல்லப்பட்டார்.; நால்வர் காய முற்றனர்.

ஜூலை—12

பருத்தித் துறை இராணுவ முகாமிலிருந்து நடைபவனியாக வந்த இராணுவத்தினர் மீது ஈழப் போராளிகள் தாக்குதல் நடத்தியதில் பல இராணுவ வீரர்கள் கொல்லப் பட்டதுடன் பலர் படுகாயம் அடைந்தனர்.

ஜூலை—14

மன்னார் அடம்பனில் இராணுவத்தினருக்கும் ஈழப் போராளிகளுக்கும் இடையில் இடம் பெற்ற மோதலில் பல இராணுவத்தினர் கொல்லப் பட்டனர்.

ஜூலை—15

மூதூர் கட்டைபறிச்சான் இராணுவ முாகமை ஈழப் போராளிகள் தாக்கியதில் 2 இராணுவத்தினர் கொல்லப் பட்டனர் ; 4 பேர் படுகாயமடைந்தனர்.

ஜூலை—16

முல்லைத் தீவு இராணுவ முகாமிலிருந்து வெளியேறிய 200 இராணுவத்தினருக்கு எதிராக சிலாவத்தை எனும் இடத்தில் வைத்து ஈ. பி. ஆர். எல். எப் இன் மக்கள் விடுதலைப் படையினர் (P. L. A) உக்கிரமான தாக்குதல் மேற் கொண்டதில், 17 இராணுவத்தினர் கொல்லப் பட்டனர் ஏராள மான இராணுவத்தினர் படுகாயம் அடைந்தனர்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இத் தாக்குதலின் போது மக்கள் விடுதலைப் படையினர் பெரிய, சிறிய மோட்டார் பீரங்கி களையும் அதி சக்தி வாய்ந்த ஆயுதங்களையும் பயன் படுத்தினர்.

ஜூலை—16

காரைநகர் கடற்படைத் தளத்துக்கு அருகில் காவலுக்கு நின்ற கடற்படை பீரங்கிப் படகு ஒன்று ஈழப் போராளிகளினால் கடற் கண்ணி வைத்துத் தகர்க்கப் பட்டது. இதில் இருந்த அனைத்துக் கடற் படை வீரர்களும் கொல்லப்பட்டனர்.

ஜூலை—1

— திருகோணமலை மாவட்டத்தில் உள்ள பள்ளி யாக் கொடல்ல என்னும் கிராமத்தில் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் மக்கள் விடுதலைப் படைக்கும் ஊர்க்காவல் படையினருக்கும் இடையில் நடந்த நேரடி மோதலில் 11 ஊர்க்காவல் படையினர் கொல்லப்பட்டனர்; 2 பேர் பலத்த காய மடைந்தனர்.

மீண்டும் 19-07-86-ல் பள்ளியாக் கொடல்ல விலிருந்து 30 மைல் தொலைவில் உள்ள ஒரு கிராமத் தில் ஊர்காவல் படையினருக்கும் மக்கள் விடுதலைப் படைக்கும் இடையில் நடந்த இதே மாதிரியான மோதலில் 25 ஊர்க்காவல் கொல்லப்பட்டதுடன் 10க்கும் மேற்பட்ட ஊர்காவல் படையினர் காய முற்றனர்.

மேற்கண்ட இருமோதல்களிலும் 50 நவீனரக துப்பாக்கிகளும் 500க்கும் மேற்பட்ட துப்பாக்கி ரவைகளும் அவர்களிடமிருந்து கைப்பற்றப்பட்டது.

ஜூலை—20

— மட்டக்களப்பு வடமுனை அருகே போராளி களின் கண்ணி வெடித்தாக்குதலில் சிக்கி 12 ராணுவத்தினர் பலியானார்கள்.

— திருகோணமலை அலரித்தோட்டம் என்னுமிடத் தில் போராளிகள் தாக்குதலினால் பல ராணுவத்தி னர் கொல்லப்பட்டனர்.

ஜூலை—22

— பருத்தித்துறை ராணுவமுகாமிலிருந்து விநாயக முதலியார் வீதி வழியாக வெளியே வந்து நூற்றுக்கு மேற்பட்ட இராணுவத்தினர் மீது ஈ.பி.ஆர்.எல்.எப் இன் மக்கள் விடுதலைப் படையினர் தாக்குதல் தொடுத்தனர். சுமார் 1 மணி நேரம் நடந்த சமரில் 6 இராணுவத்தினர் பலியாகினர்.

ஜூலை—28

— பலாலி இராணுவ விமான தளத்திலிருந்தும், வசவிளான் தற்காலிக இராணுவ முகாமிலிருந்தும் கவச வாகனங்கள் சகிதம் வெளியேறி பொதுமக்கள் வாழும் பகுதியை நோக்கி முன்னேறிக் கொண்டிருந்த நூற்றுக்கும் மேற்பட்ட ராணுவத்தின் மீது ஈ. பி. ஆர். எல். எப். இன் மக்கள் விடுதலைப் படை திடீர்த் தாக்குதலை நடத்தியது. பல இராணுவத்தி னர் கொல்லப்பட்டனர் ஏராளமானோர் படுகாய மடைந்தனர்.

---

ஜூலை—30

**யாழ் வசாவிளான் இராணுவ முகாமிலிருந்து வெளியேறிய இராணுவத்தினருடன் ஈ. பி. ஆர். எல். எப் போராளிகள் உக்கிரமான போர்.**

காலை 11.15 மணியளவில் வசாவிளான் இராணுவ முகாமிலிருந்து 100-க்கும் மேற் பட்ட இராணுவத்தினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்த வண்ணம் வெளியேறியபோது ஈ. பி. ஆர் எல். எப்.-இன் மக்கள் விடுதலைப் படையினர் இடை மறித்து முன்னேற விடாமல் மிக உக்கிரமான தாக்குதலொன்றை மேற்கொண்டனர். இம் மோதலில் நான்கு இராணுவத்தினர் அவ்விடத்திலேயே கொல்லப்பட்டதுடன் பலர் படுகாயமடைந்தனர். இதன்பின்பு இராணுவத் தினர் பதுங்கியிருந்த இடங்கள் மீது மக்கள் விடுதலைப் படையினர் மோட்டார் பீரங்கித் தாக்குதல் நடத்தியதில் 10 இராணுவ வீரர்கள் அவ்விடத்திலேயே கொல்லப்பட்டனர். மேலும் பலர் பலத்த காயமடைந்தனா. இத்தாக்குதலை எதிர்கொள்ள முடியாத இராணுவத் தினர் இறந்தவர்களையும், காயமடைந்தவர்களையும் தூக்கிக்கொண்டு தங்களது முகாமை நோக்கிப் பினவாங்கினர்.

இதன் பின்னர் பிற்பகல் 2.00 மணியளவில் மீண்டும் ஏராளமான இராணுவத்தினர் 'செல்' தாக்குதல் செய்தவண்ணம் வெளியேற முயன்றபோது காவலுக்கு நின்ற எமது 'மக்கள் விடுதலைப் படைத' தோழர்கள் தீரமுடன் இராணுவத்தினரை எதிர்க்கொண்டு விரட்டியடித்தனர் இத்தாக்குதலின்போது வீரமுடன் போராடிய மக்கள் விடுதலைப்படைத் தோழர் பவான் என அழைக்கப்படும் அந்தோணிதாஸ் என்பவர் நெஞ்சில் குண்டு பாய்ந்து வீரமரணம் அடைந்தார். மறுமொரு தோழர் சிறு காயங்களுக்குள்ளானார். ★

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## இவர்களது முடிவு இலட்சியத்தின் முடிவல்ல.
## விதைகளாய் விழுந்தவர்களுக்கு வீர வணக்கம்!

ஜூலை 08—

சிறிலங்கா அரசபடையினர் மீது தாக்குதல் நடத்துவதற்காகச் சென்ற ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியைச் சேர்ந்த 7 போராளிகள், கடலில் இயந்திரப் படகு விபத்தில் சிக்கி உயிரிழந்தார்கள்.

சாவகச் சேரியைச் சேர்ந்த இமாம் என அழைக்கப்படும் கிருபானந்தன்,

மட்டக்களப்பைச் சேர்ந்த ஞானம் என அழைக்கப்படும் திருச்செல்வம்,

இளவாலையைச் சேர்ந்த அசோக் என அழைக்கப்படும் மோகன்ராஜ்,

கோப்பாயைச் சேர்ந்த எட்வேட் என அழைக்கப்படும் ஈஸ்வரன்,

திருகோண மலையைச் சேர்ந்த நாகராஜா என அழைக்கப்படும் விமலேந்திரன்,

கல்வியங்காட்டைச் சேர்ந்த சுகிர்தன் என அழைக்கப்படும் அகிலன்

ஆகிய 7 தோழர்களின் இழப்புக்காக மக்களும் தோழர்களும் தமது இறுதி அஞ்சலியைச் செலுத்தினர்.

ஜூலை 06—

மட்டக்களப்பு கொக்கட்டிச் சோலையில் ஈழப் போராளிகளின் முகாமை இராணுவத்தினர் சுற்றி வளைத்துத் தாக்கினர். படையினரை எதிர்த்துப் போராடி 8 ஈழப்போராளிகள் வீரமரணமடைந்தனர்.

ஜூலை 13—

மன்னார் அடம்பனில் இராணுவ சுற்றி வளைப்பின் போது நேரடி மோதலில் ஈடுபட்டு ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியைச் சேர்ந்த 11 தோழர்கள் வீர மரணமடைந்தனர். இவர்களுள் மூவர் பெண் போராளிகளாவர். பானு, ஜெயந்தி, ரூபிதா, விஜி, வாசன், டக்ளஸ், ஸ்ரீபன், ஜோன், ஜோர்ஜ், சோபி, றேமன் ஆகிய 11 போராளிகளுக்கும் வீர அஞ்சலி செலுத்தப்பட்டது.

# வெல்க! ஈழ மக்கள் புரட்சிகர விடுதலைப் போராட்டம்!

PRINTED MATTER

EPIC

20, First Street,
Zacaria Colony,
Choolaimedu,
MADRAS-600 094
Tel : 422620 (Post Bag : 5551)

Mr.M.Yasocumaran,
62 A,High road,
Willesden,
London NW 10,

ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் செய்தி தொடர்பு நிறுவனமான
ஈழ மக்கள் செய்தித் தொடர்பு நிலைய வெளியீடு

EELAM PEOPLE'S INFORMATION CENTRE PUBLICATION

LONDON BRANCH : EPIC B M Box 1738, LONDON WCI 3XXN

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்